


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்ரமராஜா, பொதுச் செயலாளர் வீ.கோவிந்தராஜுலு, சென்னை தங்கம் வைரம் ஜுவல்லரி அசோசியேஷன் தலைவர் ஜெயந்திலால் ஜெ.செலானி, பொதுச் செயலாளர் எஸ்.சாந்தகுமார், தமிழ்நாடு தங்கநகை வியாபாரிகள் சம்மேளனத்தின் தலைவர் பி.சபரிநாதன், செயற்குழு நிர்வாகி எம்.கிருஷ்ணகுமார், தமிழ்நாடு தங்கநகை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.முத்து வெங்கட்ராமன், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் என்.ஜெகதீசன், செயலாளர் எஸ்.ஸ்ரீதர், மாநில துணை தலைவர் தனுஷ்கோடி, தமிழ்நாடு நகை அடகு பிடிப்போர்கள் கூட்டமைப்பு செயல் தலைவர் எஸ்.ஆர்.வெங்கடேசலு, பொருளாளர் பி.ஸ்ரீராமகுமார் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கோயம்புத்தூரில் தங்கநகை தொழிற் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டிராட்ஸ்கி மருது சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன் உள்ளார்.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# கழக பவள விழாவினை முன்னிட்டு, நலஉதவிகளுடன் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கி சிறப்புரை!

திருவண்ணாமலை, நவ. 13 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், கழக பவளவிழாவினை முன்னிட்டு, பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, நலஉதவிகள் வழங்கி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

இன்று (13.11.2024 - புதன் கிழமை) மாலை 6.00 மணிக்கு திருவண்ணாமலை, தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், திருவண்ணாமலை நகரம், அம்பேத்கர் தெருவில், கழக பவள விழாவினை முன்னிட்டு பொது மக்களுக்கு நலஉதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்அண்ணாதுரை எம்.பி. தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார் .

பொதுக்கூட்டத்தில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், பொறியாளர் அணி மாநில செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி,

கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் பிரியாவிஜயரங்கன், விஜியலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச.பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், நகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், கழக செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ. ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச். சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி (எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார்காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம் சரவணன், உ.நித்யா,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த. மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி. கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகரன்,

பேரூர்ச் செயலாகள் சி. கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், நகரமன்ற தலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக்குழு தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளா கலையரசன், பூ.அய்யாகண்ணு, தமயந்தி ஏழுமலை, சாந்திபெருமாள், பேரூராட்சி தலைவர்கள் கோ.சரவணன், கௌரிநடராஜ், செல்வபாரதி மனோஜ் குமார், நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ். பிரபு, ஹக்கிம்சேட் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக வட்டச் செயலாளர் எஸ்.எழில்மாறன் நன்றி கூறுகிறார்.

முன்னதாக மாவட்ட தி.மு.க. இசைக்குழு அம்பேத்கர் வழங்கும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.







தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் தலைமையில் நடைபெற்றது. தெற்கு மாவட்டச் செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆலோசனைகள் வழங்கி பேசினார். ஆலோசனைக் கூட்டத்தில், சண்முகையா எம்.எல்.ஏ., மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், முன்னாள் எம்.எல்.ஏ.வும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான டேவிட் செல்வின், மாவட்ட அவைத்தலைவர் அருணாச்சலம், துணைச் செயலாளர்கள் ஜெயக்குமார் ரூபன், ஜெபதங்கம் பிரேமா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மிக்கேல் அருள் ஸ்டாலின், பாலமுருகன், சுதாகர், குமார் பாண்டியன், ஒன்றியச் செயலாளர்கள் ஜெயக்கொடி, புதூர் சுப்பிரமணியன், மாவட்ட வர்த்தகர் அணி இணைச் செயலாளர் ரெங்கசாமி, தொழிலாளர் அணி வக்கீல் ரகுராமன், வக்கீல் கிருபாகரன், வக்கீல் பூங்குமார், கபடி கந்தன், கப்பிக்குளம் பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் மாவட்டம் மறையூரிலுள்ள

# ராணி மங்கம்மாள் சத்திரம் பாரம்பரிய சின்னமாக்கப்படும்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்து அறிவிப்பு!



விருதுநகர், நவ. 13 -

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகில் உள்ள மறையூரில் ராணி மங்கம்மாள், மருது பாண்டியர்களின் வரலாற்றுக்கு ஆதாரமாகத் திகழும் பழமையான சத்திரத்தை தொல்லியல் துறை மீட்டெடுத்து பாதுகாக்க வேண்டும் என பொதுமக்கள், தொல்லியல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர். மக்களின் கோரிக்கையை ஏற்று ஒரே வாரத்தில் மாவட்ட ஆட்சியர், தொல்லியல் அதிகாரிகளுடன் ராணி மங்கம்மாள் சத்தரத்தில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் தங்கம் தென்னரசு.

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகில் உள்ள மறையூரில் 300 ஆண்டுகள் பழமையான ராணி மங்கம்மாள் சத்திரம் அமைந்துள்ளது. இது கி.பி.1689 முதல் 1706 காலத்தில் தனது பேரனான விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் சார்பாளராக மதுரையை ஆண்டவர் ராணி மங்கம்மாள். இவர் காலத்தில் தான் மரையூர் மற்றும் நரிக்குடி சத்திரங்கள் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது தனுஷ்கோடி, ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக கட்டப்பட்டு பிற்காலத்தில் பள்ளியாக இயங்கிவந்தது.

இந்நிலையில் போதிய பாரம்பரிப்பு இல்லாததால் சத்திரத்தை சுற்றிலும் மரங்கள் வளர்ந்துள்ளன. இதனிடையே வரலாற்றுக்கு ஆதாரமாக உள்ள இச்சத்திரத்தில் வளர்ந்துள்ள மரங்களை அகற்றி, பழுது நீக்கி பாரம்பரியச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை எழுந்தது.

இந்நிலையில் நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பேசிய அமைச்சர், நரிக்குடி ஒன்றியம் மறையூரில் அமைந்துள்ள 14, 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ராணி மங்கம்மாள் அன்னச்சத்திரம் இப்பகுதியில் செல்லும் வழிப்போக்கர்களுக்கு நாள்தோறும் அன்னம் வழங்கிய பெருமையுடையது. பழமை வாய்ந்த இச்சத்திரம் தொல்லியல் முக்கியத்துவம் கொண்டது. பராமரிப்பு இன்றி பாழடைந்த நிலையில் உள்ளது. இச்சத்திரத்தை சீரமைத்து இதன் தொன்மையை மீட்டெடுக்க வேண்டும் என இப்பகுதி பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்தனர்.

அதன் அடிப்படையில் நம்முடைய மாவட்ட ஆட்சியர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளோடு இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டோம். எங்களோடு இணைந்து தொல்லியல் துறை அலுவலர்களும் இந்தக் கட்டடத்தின் பழமை குறித்து ஆய்வு செய்தனர். இந்த ஆய்வினுடைய அடிப்படையில் சத்திரத்தின் பழமை மாறாத வகையில் முழுமையாக சீரமைத்து பாரம்பரிய நினைவுச்சின்னமாக மீட்டெடுக்க ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்னர் இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் தொல்லியல் மற்றும் பாரம்பரிய முக்கியத்துவம் சார்ந்த இடங்களை பாதுகாத்திட தனி கவனம் செலுத்தி வருகிறார். விருதுநகர் மாவட்டத்தில் நடக்கக்கூடிய வெம்பக்கோட்டை அகழ்வாய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. எனவே தொல்லியல் வரலாற்றில் விருதுநகர் மாவட்டத்தின் முக்கியத்துவம் கருதி பல இடங்களில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நரிக்குடியில் அமைந்துள்ள புகழ்வாய்ந்த வழிப்போக்கர் அன்னச்சத்திர மண்டபத்தை சிறந்த முறையில் சீரமைத்து அதை பாரம்பரிய சின்னமாக பொலிவு பெற மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் எனக் கூறினார்.

## தூத்துக்குடி மாவட்டத்திற்கு இன்று வருகை தரும்

# துணை முதல்வருக்கு - தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, நவ. 13 -

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (13.11.2024) தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகைதர உள்ளார்.

தமிழ்நாட்டு அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் அனைத்து பகுதியினருக்கும் உரிய முறையில் சென்று சேர்வதற்கும், தமிழ்நாடு பல்வேறு விளையாட்டுகளின் மையமாக மாறுவதற்கும் கடுமையான உழைப்பை செலுத்திவரும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றப்பிறகு முதன் முறையாக தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முதன்மை இடத்திற்கு வரவேண்டும் என்பதற்காக இளம் வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்ச்சி மையங்களையும், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ளூர் அளவிலான விளையாட்டு வீரர்களை வளர்த்தெடுப்பதற்காக விளையாட்டு அரங்குகள் (மினி ஸ்டேடியம்) அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக தீவிர கவனம் செலுத்திவரும் துணை முதலமைச்சர் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தரும் இன்று (13.11.2024) மாலை 6 மணிக்கு புதூர் பாண்டியாபுரம் டோல் கேட் அருகில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பாக எழுச்சிமிகு வரவேற்பு வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பகுதி பேரூர்ச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி ஒன்றிய ஊராட்சி நகராட்சி மன்றம் பேரூர் மன்றம் ஊராட்சிகள் ஆகிய அமைப்பு களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், கிளைக் கழக செயலாளர்கள் அனைத்து அணிகளின் உள்ளூர் நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.





ஒன்றிய அரசின் மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் தலைமையில் நேற்று (12.11.2024) புதுடெல்லியில் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் எரிசக்தித் துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசின் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கலந்துகொண்டு ஒன்றிய அமைச்சர் மனோகர் லால் அவர்களை சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார். இம்மாநாட்டில் க.நந்தகுமார், (தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு மின்சார வாரியம்), விசு மகாஜன், (இணை நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு மின்சார வாரியம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.